தினமணி 26.05.2019

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரத்த தான முகாம்




முகாமை துவக்கி வைக்கின்றனர் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்வி.ஆர்.கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர்கள் ப. பட்டாபிராமன், கு. தங்கராஜூ மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலர் வசந்தி உள்ளிட்டோர்.

**கரூர், மே 25:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் ரத்த தான முகாம் சனிக்கிழமை காகித ஆலையின் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.

ரத்த தான முகாமை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)எஸ்வி.ஆர்.கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) ப. பட்டாபிராமன் மற்றும் முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) கு.தங்கராஜூ மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி இரத்த வங்கி மருத்துவ அலுவலர் வசந்தி ஆகியோர் துவக்கி வைத்து, ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்களை வழங்கினர்.

முகாமில், ஆலைப் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர், ஒப்பந்தப் பணியாளர்கள், தொழில் பழகுநர்கள், ஐடிஐ மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் பங்கேற்று ரத்த தானம் செய்தனர்.

மொத்தம் 192 பேர் ரத்த தானம் வழங்கினர். முகாமில், பங்கேற்று ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.